மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர், நஞ்சைக்காக இருந்தால் 1½ ஏக்கர் வீதம் கொடுக்கிறோம்.

கிராம அதிகாரிகள்

* 485. வினா—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராம அதிகாரிகளாக பணிபுரியும் கர்ணம், கிராம முன்சீப்புகள் 1970-71-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் வரை யாரேனும் சஸ்பெண்ட் அல்லது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்? அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக கிராம அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள் என்று பேசப்படுகிறதே, அப்படி சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், அபராதம் கட்டியிருப்பவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிப்பட்ட ஒரு மாவட்டத்தை ஏதோ தண்டித்ததாக அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கலாம்.

Distribution of pongal packets to prisoners

* 439 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any pongal packets were distributed to the prisoners of the Madras Central Jail under the auspices of a local organisation;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reason as to how this local organisation was permitted to distribute the packets to the prisoners?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

@ 317–320ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1972 மார்ச் 14]

(இ) போகி பண்டிகை நாள் 14—1—1972 அன்று சென்னை மயிலை அக்காடமியினரும் செல்வி நிர்மலாவும் சென்னை மத்திய சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு பொங்கல் பொட்டலங்கள் வழங்கினர்.

(உ) வழக்கமாக பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் உள்ளூரிலுள்ள மயிலை அக்காடமி, முன்னுள் கைதிகள் உதவிச் சங்கம் சமய அல்லது அறவழி போன்ற அமைப்புகள் அல்லது தனி நபர்கள், சிறை கண்காணிப்பாளர், சிறைத் துறைத் தலைவர் ஆகியோரின் முன் அனுமதி பெற்று சிறையிலுள்ள கைதிகளுக்கு இனிப்பு பொட்டலங்கள் வழங்குவதுண்டு. இது தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறைக் கையேடு, 2-ம் பகுதியில் உள்ள விதி எண் 283 (4)-ன் படி அனுமதிக்கப்படுகின்றது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாநிலத்தில் வேறு சிறைச்சாலையில் இவ்வாறு வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறைச்சாலை உள்ள அந்தந்த நகரங்களில் உள்ள தனிப்பட்ட நபர்கள் சிறைக் கைதிகளுக்கு இப்படிப்பட்ட மனிதாபிமானத் தொண்டுகளைச் செய்து வருகிறார்கள்.

Rubber Factory for Kanyakumari district

*440 *Q*.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal before the Government either in public sector or in private sector to start a rubber factory either in Kanyakumari district or in Ramanathapuram district?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டயர்களையும் டியூப்புகளையும் தயாரிப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு 1970, டிசம்பரில் இந்திய அரசு அனுமதிக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது. இத் திட்டம் கூட்டுத் துறையில் இருக்கும். இதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் என்ற புதிய கம்பெனி ஒன்று, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் டயர் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதன் சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே. ரப்பர் உற்பத்தி முழுவதும் நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரப்பரே உற்பத்தியில்லை. நிலைமை இவ்வாறு